அரசினர் ஈட்டுறுதி மருத்துவமனை மதுரை-18
31 JUL 2021

<u>பதிவஞ்சல் ஒப்புகையுடன்</u>

4388

**சென்னை–6, குடும்ப நல இணை இயக்குநர் (நிர்வாகம் ) அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் ஆணை**
**முன்னிலை: திரு.வி.பால்ராஜ், எம்.காம்.,**

ந.க.எண்.1148/குந/நி1/2021 நாள்: 26.07.2021

பொருள் நிர்வாகம் – தமிழ்நாடு அமைச்சுப்பணிகள் – கருணை அடிப்படையில் பணிநியமனம் – பணியிடை மாரணமடைந்த திரு.செல்லையா என்பவரின் மகள் திருமதி.பாலமுருகேஸ்வரி – இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை ஆணை வழங்குதல் – தொடர்பாக.

பார்வை
1. இவ்வியக்கக பணிநியமன ஆணை எண்.6479/குந/நி1/2015, நாள் 11.01.2019.
2. மதுரை, தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கண்காணிப்பாளரின் கடித எண்.2849//நி1/2019, நாள் 02.02.2021
3. திண்டுக்கல் மாவட்ட துணை இயக்குநரின் கடித எண்.356/ குந/ நி1/2021, நாள்:22.04.2021.
4. அரசாணை (நிலை) எண்.48, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, (Q1) நாள் 26.02.2021.
5. அரசு கடித எண்.8755/எடி2/2021–1 மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை நாள் 16.03.2021.

*******

**ஆணை:**

பார்வையில் கண்டுள்ள அரசாணை மற்றும் அதன் தொடர்புடைய ஆணையின்படி தமிழ்நாடு மாநில மற்றும் சார்நிலைப் பணிகள் பொது விதிகள் 10 (ஏ) (1) ன் கீழ் திருமதி.பாலமுருகேஸ்வரி (த/பெ (லேட்) திரு.எம்.செல்லையா, காவலர், மாவட்ட குடும்பநல செயலகம், மதுரை என்பவர் கருணை அடிப்படையின் கீழ் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக அரசுப் பணியில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்ட குடும்பநல செயலகத்தில் காவலராக பணியாற்றிக் கொண்டிருந்த திரு.செல்லையா என்பவர் 19.10.2001 அன்று பணியிடை மரணமடைந்துள்ளார் அவர் அப்பணியில் தகுதிகாண்பருவம் முடிக்கப் பெற்றவர். அவரின் பிறந்த தேதி 12.06.1946 என்பதால் அவருடைய உத்தேச ஓய்வு பெறும் நாள் 30.06.2004 ஆகும். எனவே பணியிடை மரணமடைந்த அரசு ஊழியரின் மகள் திருமதி.பாலமுருகேஸ்வரி என்பவர் தனக்கு கருணை அடிப்படையில் தமிழ் நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி உரிய காலகெடுவுக்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார். அவரின் பிறந்த தேதி 06.06.1985 அவர் பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளதாலும், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெறுவதற்கான ஏனைய தகுதிகளை பூர்த்தி செய்துள்ளதாலும் திருமதி.பாலமுருகேஸ்வரி என்பவர் கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தற்காலிகமாக இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டு திண்டுக்கல் மாவட்ட குடும்ப நல செயலகத்தில் பணியமர்த்தப் பட்டுள்ளார். தனியர் 24.01.2019 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார். தற்போது 04.06.2019 முதல் மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனையில் இளநிலை உதவியாளராக பணிபுரிந்து வருகிறார்.

பார்வை (5)–ல் காணும் கடிதத்தில் தனியருக்கு இளநிலை உதவியாளர் பதவியில் அவர் பணியில் இணைந்த நாளான 24.01.2019 முற்பகல் முதல் பணிவரன் முறை செய்து ஆணை வழங்குமாறு மதுரை தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை கண்காணிப்பாளர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார். அன்னார் மீது நாளதுவரை எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் நிலுவையில் இல்லை என சான்றளித்துள்ளார்.

எனவே, பார்வை (4)-ல் காணும் அரசாணை மற்றும் பார்வை (5)ல் காணும் அரசு கடிதங்களின் அறிவுறுத்தியுள்ளபடி, கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திருமதி.பாலமுருகேஸ்வரி என்பவரின் தற்காலிக பணியினை அன்னார் இளநிலை உதவியாளராக அவர் பணியில் இணைந்த நாளான 24.01.2019 முற்பகல் முதல் பார்வை 1ல் காணும் அரசாணையின்படி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் வெற்றிகரமாக முடித்திடல் வேண்டும். இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம் தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை இருப்பின் அதைப் பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

வி.பால்ராஜ்,
இணை இயக்குநர் (நிர்வாகம்)

பெறுநர்
திருமதி.பாலமுருகேஸ்வரி,
இளநிலை உதவியாளர்,
தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை,
மதுரை.

நகல்
1. துணை இயக்குநர்,
   மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் மற்றும் குடும்ப நலம்,
   மாவட்ட குடும்ப நலச் செயலகம், திண்டுக்கல் மாவட்டம்.
2. மருத்துவமனை கண்காணிப்பாளர், தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை,
   மதுரை 18.
3. தனியரின் பணிப்பதிவேடு.
4. இருப்புக்கோப்பு
5. உபரி.

உண்மை நகல்/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

27/7/2021

கண்காணிப்பாளர்.

1396 | E2 | 2019